□□□□□□□□□□□□□□□ □□□□: □□42□□□□ □□□□□□□: □2□□□□□□□□ □□□□□□□□□□2010



வளரும் நாடுகளில் உணவுப்பாதுகாப்பு மற்றும் மனிதப் பாதுகாப்பு பற்றிய கண்ணோட்டம் – இளைஞர்களை ஈடுபடுத்துதல்

–என். பரசுராமன்

"அமைதிக்கான போர் இரண்டு வகையாக நடைபெற வேண்டும். முதல் போர் பாதுகாப்பு முனையில் நடைபெற வேண்டும். அங்கு கிடைக்கும் வெற்றி அச்சத்திலிருந்து விடுதலை பெற்றுத் தரும். இரண்டாவது போர் பொருளாதார மற்றும் சமூக தளத்தில் நடத்தப்பட வேண்டும். அதில் கிடைக்கும் வெற்றி தேவைகளிலிருந்து விடுதலை பெற்றுத்தரும். இந்த இரண்டிலும் வெற்றி கிடைத்தால் மட்டுமே உலகில் நிலையான அமைதியை ஏற்படுத்த முடியும். உலகில் ஆண்களும், பெண்களும் தங்களது வீடுகளிலும், வேலையிலும் பாதுகாப்பு இல்லாமல் ஐ.நா. பாதுகாப்பு செயல்திட்டத்தில் இடம் பெற்றிருக்கும் எந்த சட்டமும் உலகில் அமைதியை ஏற்படுத்த பாதுகாப்பு கவுன்சிலுக்கு உதவாது.''

மனித இனத்தில் கவனம்

நீண்ட காலமாகவே பாதுகாப்புக் கொள்கை என்பது இரு நாடுகளுக்கு இடையே மோதல் ஏற்படுவதற்கான வாய்ப்புகளை அடிப்படையாக வைத்து வடிவமைக்கப்படுகிறது. இது ஒவ்வொரு நாட்டின் எல்லைக்கும் மற்ற நாடுகளால் ஏற்படும் அச்சுறுத்தல்களுடன் ஒப்பிடப்படுகிறது. எனவே நாடுகள் தங்களின் பாதுகாப்புக்காக ஆயுதம் ஏந்துகின்றன. இன்றைய நிலையில் பெரும்பாலான மக்களுக்கு பாதுகாப்பின்மை என்பது பேரழிவை ஏற்படுத்தும் உலக நிகழ்வுகளிலிருந்து உருவாவதைவிட, அன்றாட வாழ்க்கை குறித்த கவலைகளால்தான் அதிகமாக ஏற்படுகிறது. பணிப்பாதுகாப்பு, வருவாய் பாதுகாப்பு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு, குற்றங்களிலிருந்து பாதுகாப்பு ஆகியவைதான் பெரிய அளவில் கவலை ஏற்படுத்தும் விசயம் ஆகும். இவை அனைத்துமே ஒன்றுடன் ஒன்று தொடர்பு கொண்டவையாகும். பஞ்சம், நோய், மாசு, போதை மருந்து கடத்தல், பயங்கரவாதம், இன மோதல்கள், சமூகப் பிரிவினை ஆகியவை இனி ஒரு நாட்டின் எல்லைக்குள் மட்டுமே தனித்தனியாக நடக்கும் விசயங்களாக இருக்காது. இதன் விளைவுகள் உலகம் முழுவதும் பரவக் கூடியவையாகும்.

உலகை தற்போது ஆட்டிப்படைக்கும் வறுமை, பசி, பாதிக்கப்படும் தன்மை போன்ற பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கான முக்கிய நடவடிக்கை என்பது, உணவு மற்றும் நுண்ணூட்டச் சத்து வழங்குவதற்கான சிறப்பு வசதியுடன் கூடிய விரிவுபடுத்தப்பட்ட சமூகப் பாதுகாப்பு செயல்திட்டத்தின் மூலம் மனித வளர்ச்சியில் கவனம் செலுத்துவது தான். முழுமையான உடல் மற்றும் மன வளர்ச்சியை எட்டவும், அதன் மூலம் செயல்பாடு மற்றும் உற்பத்திக்கான திறனைப் பெறவும் சிறப்பான சுகாதாரம் மற்றும் நுண்ணூட்டச் சத்து நிலைதான் தனி நபர்களுக்கு தேவைப்படும் முதன்மையான, முக்கியமான சொத்து ஆகும்.

மனிதப் பாதுகாப்பின் முக்கிய அம்சங்கள்

பொருளாதார பாதுகாப்பு : வேலைவாய்ப்பின்மை, பணிப் பாதுகாப்பின்மை, சமத்துவமின்மை, வறுமை ஆகியவை அகற்றப்பட வேண்டும்.

உணவுப் பாதுகாப்பு : போதுமான உணவின்மையும், அனைத்து மக்களுக்கும் உணவு கிடைக்காத நிலை ஏற்பட்டிருக்கிறது.

சுகாதார பாதுகாப்பு : தொற்று நோய்கள், சுற்றுச்சூழல் மாசு தொடர்பான நோய்கள், போதைப் பொருள் பயன்பாடு ஆகியவை நீக்கப்பட வேண்டும்.

சுற்றுச்சூழல் பாதுகாப்பு : காற்று, நீர், மண், வானம் ஆகியவை பாதிக்கப்படுவதை தடுத்தல்.

தனிநபர் பாதுகாப்பு : மோதல்கள், பயங்கரவாதம், பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் ஒழிக்கப்பட வேண்டும்.

சமூக பாதுகாப்பு : இன மோதல்களை தடுத்தல்.

அரசியல் பாதுகாப்பு : மனித உரிமை மீறல்களை தடுத்தல்.

பொருளாதார பாதுகாப்பு மற்றும் உணவுப் பாதுகாப்பு

உலகின் ஒட்டுமொத்த ஏழை மக்களில் மூன்றில் ஒரு பங்கினர் இந்தியாவில்தான் வாழ்கின்றனர். இந்திய மக்களில் 44% பேர் ஒரு நாளைக்கு ஒரு டாலர் என்ற சர்வதேசங்களில் அங்கீகரிக்கப்பட்ட அளவைவிட குறைவாகவே வருவாய் ஈட்டுகின்றனர். 86% பேர் நாள்தோறும் இரண்டு டாலருக்கும் குறைவாகவே வருவாய் ஈட்டுகின்றனர். இந்தியாவிலுள்ள ஒவ்வொரு இரண்டாவது குழந்தையும் நுண்ணூட்டச் சத்துக் குறைபாட்டால் மிதமாகவோ

– என்.பரசுராமன், முதன்மை விஞ்ஞானி, எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி அறக்கட்டளை, சென்னை.



அல்லது கடுமையாகவோ பாதிக்கப்பட்டுள்ளன என்பதை இந்தியாவின் அதிகாரப் பூர்வ புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

இந்தியாவில் கிராமப்புறங்களில் தான் வறுமை அதிகமாக காணப்படுகிறது. அங்குள்ள நிலமற்ற கூலித் தொழிலாளர்களும், அன்றாட பணிக்கு செல்வோரும் பொருளாதார அளவில் பின்தங்கியவர்களாக இருப்பதுதான் இதற்குக் காரணம். பட்டியலினத்தவர், பழங்குடியினர், பெண்கள், பெண்களைத் தலைவராகக் கொண்ட குடும்பங்கள், முதியோர், பெண் குழந்தைகள் ஆகியோர் தான் மற்றவர்களைவிட அதிகம் பாதிக்கப்படுகின்றனர். கிராமப்புற ஏழைகள் எனப்படுவோர் தினக்கூலி தொழிலாளர்களும், குறு விவசாயிகளும்தான். அதாவது, குறைந்த அளவு நிலம் உள்ளிட்ட சொத்துக்களை கொண்டவர்கள். ஒட்டுமொத்தமாக இந்தியாவின் கிராமப்புற மக்களில் பட்டியலினத்தவர் மற்றும் பழங்குடியினர் அளவு 25%ஆக உள்ளது. ஆனால், வறுமையில் வாடுவோரின் எண்ணிக்கையில் அவர்களின் அளவு 42%க்கும் அதிகமாக உள்ளது. வறுமையை அகற்றுவதும், உணவுத் தற்சார்பை எட்டுவதும்தான் 1951-52ம் ஆண்டில் இருந்தே இந்தியாவின் வளர்ச்சிக்கான திட்டமிடலின் முக்கிய அம்சங்களாக இருந்து வருகின்றன. எனினும் இந்த இலக்குகளை எட்டுவதற்கான உத்திகளில் வேறுபாடுகள் நிலவுகின்றன. காலப்போக்கில் கிடைத்த அனுபவங்களின் பயனாக கொள்கைகளிலும் மாற்றங்கள் செய்யப்பட்டன. 60களின் மத்தியிலும் 70களிலும் அதன் பிறகும் வறுமையை ஒழிப்பதற்கான உத்திகளில் அதிரடி மாற்றங்கள் ஏற்பட்டன.

கடந்த காலங்களில் வறுமை மற்றும் உணவுப் பாதுகாப்புத் துறைகளில் நாம் பெற்ற வெற்றிகளும் தோல்விகளும் பளிச்சென தெரிகின்றன. 40 ஆண்டுகளுக்கு முன்பு, நமது நாட்டிலிருந்த 44 கோடி மக்களுக்குத் தேவையான உணவை உற்பத்தி செய்ய நம்மால் முடியவில்லை. ஆனால் இப்போது இந்தியாவால் அதன் 100 கோடிக்கும் அதிகமான மக்களுக்கு அடுத்த கப்பலில் வரும் PL480 வகை கோதுமைக்காக காத்திருக்காமல் உணவு வழங்க முடியும்.

2001ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின் அடிப்படையிலான சில சமூகப் பொருளாதார புள்ளி விவரங்களைகீழ்க்கண்ட அட்டவணையில் பார்ப்போம் :

மக்கள் தொகை	100 கோடி
மக்கள்தொகை வளர்ச்சி	ஆண்டுக்கு 1.9%
தேசிய வறுமை விகிதம்	26% (அரசுக் கணக்கெடுப்பின் படி) ஆனல் 44% பேர் ஒரு நாளைக்கு ஒரு டாலர் கூட வருவாய் ஈட்டவில்லை.
சராசரி வாழ்நாள்	63 ஆண்டுகள்
கிராமப்புற மக்கள் தொகை (%)	71% (1970ல் இது 80% ஆக இருந்தது).
பிரசவத்தின்போது குழந்தை இறக்கும் விகிதம் (கிராமப்புறம்)	1000 பிறப்புகளில் 77 பேர் (1997)
பிரசவத்தின்போது இறக்கும் விகிதம் (நகர்ப்புறம்)	1000 பிறப்புகளில் 45 பேர் (1997)
5 வயதுக்குள் குழந்தை இறக்கும் விகிதம்	1000 பிறப்புகளில் 88 பேர் (1997)
5 வயதுக்குள் காணப்படும் சத்துக் குறைவுகள் - வயதுக்கேற்ற வளர்ச்சி - வயதுக்கேற்ற எடை	45.5% (1999) 47% (1999)
ஆதிதிராவிடர்	மக்கள்தொகையில் 16.5% (1991)
பழங்குடியினர்	மக்கள் தொகையில் 8% (1991)
நகர்ப்புற மக்கள் தொகை	ஒட்டுமொத்த மக்கள் தொகையில் 29%
கல்வியறிவின்மை (வயது வந்த ஆண்கள்)	31%
கல்வியறிவின்மை (வயது வந்த பெண்கள்)	54%
மொத்த தேசிய வருவாய்	47,400 கோடி டாலர்
தனிநபர் வருமானம்	46 அமெரிக்க டாலர்
ஆண்டு பொருளாதார வளர்ச்சி (கடந்த பத்தாண்டில்)	4.5% - 5.5% -
Gini Co-efficient	29.7%

ஆதாரம் : www.indiastat.com



தேசிய மற்றும் உலக உற்பத்தி முறை மற்றும் அதுசார்ந்த தொழிலாளர்கள் அமைப்பில் ஏற்பட்ட மாற்றங்கள்

உலக அளவில் உற்பத்தி மற்றும் தொழிலாளர்கள் முறையில் ஏற்பட்ட மாற்றங்கள்தான் வன்முறை மற்றும் பாதுகாப்பின்மையை அதிகரித்தன. உலகமயமாக்கல் மற்றும் அதனுடன் இணைந்த உலக உற்பத்தி முறை மற்றும் தொழிலாளர் முறையில் செய்யப்பட்ட விரிவான சீர்திருத்தங்கள் காரணமாக வரலாறு காணாத நன்மைகள் ஏற்பட்டன. அதிலும் குறிப்பாக உலகின் பல கோடி மக்களை வறுமை நிலையில் இருந்து உயர்த்த இவை பெரிதும் உதவின. அதேநேரத்தில் உலகமயமாக்கலுக்கு கறுப்பு பக்கமும் உள்ளது. இதனால் வேலை வாய்ப்புகள் பெரிதும் குறைந்தன. உற்பத்தி மற்றும் வழங்கல் முறையிலிருந்து சமூகங்களும் தனி நபர்களும் விலக்கப்பட்டதால் வாழ்வாதார பாதுகாப்பின்மை அதிகரித்தது. இத்துடன் சேர்ந்து, ஒதுக்கப்பட்ட, விரக்தியடைந்த, தனிமைப்படுத்தப்பட்ட மக்கள், குறிப்பாக இளைஞர்கள் தொடர்பான பலவகையான வன்முறைகளும் அதிகரித்தன.

பொருளாதாரம் தொடர்பான கோஷ்டி மோதல்கள், குறிப்பாக அரசியல் உள்நோக்கத்துடன் கூடிய அடையாள மோதல்கள், வீடுகளில் சுயமரியாதைக்கு பாதிப்பு ஏற்படுவதால் உருவாகும் பாலின அடிப்படையிலான குடும்ப வன்முறை ஆகியவையும் இதில் அடங்கும். உலகமயமாக்கலின் மூலம் கிடைத்த வாய்ப்புகள்தான், பொருளாதார வளர்ச்சியின் கறுப்பு பக்கத்தை அதிகரிக்கச் செய்தன. வன்முறையின் அளவு அதிகரித்ததில் இதற்கும் பங்கு உண்டு. உலக அளவில் அதிகரித்து வரும் போதை மருந்து கடத்தல் மற்றும் பாலியல் தொழிலுக்காக இளம் பெண்கள் கடத்தல், சட்டத்திற்கு எதிரான வகையில் ஒரு நாட்டு குடிமக்களை இன்னொரு நாட்டிற்கு கடத்துதல் ஆகியவை தொடர்பாக ஏற்படும் பல வகையான வன்முறைகள்தான் இந்த கறுப்பு பக்கங்களில் முக்கியமானவை ஆகும்.

வேலைவாய்ப்பின்மையின் விளைவுகள்

உலகின் பல்வேறு நாடுகளில் வேலைவாய்ப்பின்மையால் ஏற்படும் விளைவுகளுக்கான சில எடுத்துக் காட்டுகளை "ரோட்ஜர்ஸ்'' அமைப்பு வெளியிட்டிருக்கிறது. நிகாரகுவா நாட்டில் நிலவும் கடுமையான வேலை வாய்ப்பின்மையாலும், பொருளாதார வளர்ச்சி வாய்ப்பின்மையாலும் அங்குள்ள இளைஞர்கள் பாதிக்கப்பட்டு, போதை மருந்து கடத்தலில் ஈடுபடத் தொடங்கி விட்டனர். கரிபீயன் கடலோரப் பகுதிகளில் வாழும் கிராமப்புற ஏழை மக்களும் (கொலம்பியாவிலிருந்து வரும் போதை மருந்துகள் இங்குதன் பெறப்படுகின்றன) மனாகுவா பகுதியில் உள்ள நகர்ப்புற ஏழைகளும் (இங்கிருந்து தான் ஹோண்டு ராஸ் நாட்டிற்கு அமெரிக்க நெடுஞ்சாலைகள் வழியாக போதைமருந்து அனுப்பி வைக்கப்படுகிறது) போதை மருந்து கடத்தலில் ஈடுபட்டுள்ளனர். கிராமப்புற பகுதிகளில் போதை மருந்து கடத்தல் கோண்ட்ரா கொரில்லா அமைப்பின் முன்னாள் உறுப்பினர்களாலும், நகர்ப்புற பகுதிகளில் இளைஞர் குழுக்களாலும் நடத்தப்படுகின்றன. இந்த இரு குழுவினருமே தங்களை எவரும் எதிர்க்கக்கூடாது என்ற எண்ணத்தில் அடிக்கடி வன்முறைத் தாக்குதல், துப்பாக்கி சூடு போன்றவற்றில் ஈடுபடுகின்றனர். அதேபோல் நைஜீரியாவிலும் உள்ளூர் குற்றவாளிகள் போதை மருந்து கடத்தலில் ஈடுபடுகின்றனர். தென்னாப்பிரிக்காவிலிருந்து வரும் போதை மருந்து, நைஜீரியா வழியாகத் தான் வெளிநாடுகளுக்கு அனுப்பப் படுகின்றன.

சுகாதார பாதுகாப்பு

வளரும் நாடுகளில் உயிரிழப்புகளுக்கான முக்கிய காரணங்களாக இருப்பவை தொற்று நோய்கள்தான். இதனால் ஆண்டுதோறும் ஒரு கோடியே 70 லட்சம் பேர் உயிரிழக்கின்றனர். இதற்கு நுண்ணூட்டச் சத்து குறைவு, அசுத்தமான சுற்றுச்சூழல் (மாசுபட்ட குடிநீர்) ஆகியவையும் காரணமாகும். இதனால் பெரிதும் பாதிக்கப்படுபவர்கள் கிராமப்புற குழந்தைகள்தான். கருவுற்ற பெண்களுக்கான நிலைமையோ இன்னும் மோசமாகும். ஒவ்வொரு ஆண்டும் குழந்தைப் பேறு தொடர்பான காரணங்களால் பத்து லட்சத்திற்கும் மேற்பட்ட பெண்கள் உயிரிழக்கின்றனர். போலியோ, டெங்கு, சிக்கன்குனியா போன்றவை மிகக்கொடிய நோய்களாக உருவெடுத்து வருகின்றன. இதனால் மருத்துவ அதிகாரிகள் கவலை அடைந்துள்ளனர். இந்தியாவில் டெங்கு காய்ச்சலில் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை கடந்த 2006ம் ஆண்டில் 8088ஆக உயர்ந்தது. இதில் 136 பேர் உயிரிழந்தனர். டெங்கு காய்ச்சலால் மிகக் கடுமையாக பாதிக்கப்பட்டது தில்லிதான். அங்கு 2,372 பேர் டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்டதுடன் 50 பேர் உயிரிழந்தனர். இந்தியாவில் ஒவ்வொரு ஆண்டும் மழைக்காலம் முடிந்த பிறகு, தேங்கி கிடக்கும் தண்ணீரிலிருந்து உருவாகும் கொசுக்களால்தான் டெங்கு காய்ச்சல் பரவுகிறது. தில்லியில் மிக மோசமான டெங்கு தாக்குதல் 1996ம் ஆண்டில் தான் ஏற்பட்டது. அப்போது 10 ஆயிரத்திற்கும் அதிகமான மக்கள் டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்டனர்.

கடந்த 2006ம் ஆண்டில் மட்டும் 119 போலியோ தாக்குதல்கள் கண்டு பிடிக்கப்பட்டன. அவற்றையும் சேர்த்து

இந்த ஆண்டுவரை போலியோவால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை 416ஆக உயர்ந்திருக்கிறது. 2005ம் ஆண்டில் இந்தியா முழுவதும் 66 பேரை மட்டுமே போலியோ நோய் தாக்கியது. இதுபோன்ற வைரஸ்கள் பரவுவது மூன்று அம்சங்களைச் சார்ந்ததாகும். நுண்ணூட்டச் சத்துக் குறைவு, சுற்றுச்சூழல் காரணங்கள், துப்புரவு மற்றும் தூய்மையின்மை ஆகியவை தான் அந்த மூன்று காரணங்கள் ஆகும். இதனிடையே உத்தரபிரதேசத்தில் உருவான வைரஸ்களின் பாதிப்பு நேபாளம், வங்கதேசம் போன்ற அண்டை நாடுகளையெல்லாம் தாண்டி ஆப்பிரிக்காவிலுள்ள அங்கோலா, நமீபியா, காங்கோ குடியரசு ஆகிய நாடுகளுக்கும் பரவியிருக்கிறது. உலகின் பெரும்பாலான நாடுகளிலிருந்து போலியோ நோய் ஒழிக்கப்பட்டுவிட்ட போதிலும், நைஜீரியா, இந்தியா, பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளில் இந்த நோய் அவ்வப்போது ஏற்பட்டுக் கொண்டுதான் இருக்கிறது. 2005ம் ஆண்டில் உலகெங்கும் 1,900 பேர் போலியோ நோயினால் பாதிக்கப்பட்டனர்.

சிக்கன் குனியா வைரஸ் நோய் எதிர்ப்பு சக்தியை குறைத்துவிடும். இந்த நோயால் பாதிக்கப்பட்டு உயிரிழந்தவர்களில் 70%க்கும் அதிகமானவர்கள் 60 வயதைக் கடந்தவர்கள் ஆவர். இந்தியாவில் ஒவ்வொரு ஆண்டும் மழை ஓய்ந்த பிறகு சிறு சிறு பள்ளங்களில் தேங்கிக் கிடக்கும் அசுத்தமான தண்ணீரில் உருவாகும் நோய் பரப்பும் கொசுக்கள்தான் சிக்கன்குனியா நோயை ஏற்படுத்துகின்றன. சிக்கன் குனியா நோய் கேரளாவில்தான் 2006ம் ஆண்டு ஜூலை 27ம் தேதி கண்டுபிடிக்கப்பட்டது. அன்று முதல் இன்று வரை இந்தியாவில் 13 லட்சம் பேர் சிக்கன்குனியா நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். கேரளாவில் மட்டும் ஒரு லட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

HIV மற்றும் எய்ட்ஸ்

HIV மற்றும் எய்ட்ஸ் உலகம் முழுவதும் பரவியிருக்கும் குணப்படுத்த முடியாத நோயாகும். பெரும்பாலும் நகர்ப்புறங்களில்தான் ஏற்படுகிறது. ஆண்கள், பெண்கள் என இரு பாலரும் இந்நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். 20 முதல் 40 வயதுவரையுள்ளவர்களை இந்த நோய் அதிகமாக பாதிப்புக்குள்ளாகி வருகின்றனர். இதனால் எதிர்காலத்தில் ஆதரவற்றவர்கள் உருவாக வாய்ப்புள்ளது. இது மிகவும் கவலையளிக்கும் விஷயம் என்பதால் இது குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும்.

இந்தியாவில் தற்போது HIV யுடன் வாழும் மக்கள்தான் எத்தனை பேர் என்பதில் கருத்து வேறுபாடு உள்ளது. HIVயை எதிர்த்து போராடும் பணியில் ஈடுபட்டிருக்கும் ஐ.நா. நிறுவனமான UNAIDS நடத்திய கணக்கெடுப்பின் படி 2005ம் ஆண்டின் இறுதியில் இந்தியாவில் 57 லட்சம் பேர் HIVயுடன் வாழ்வதாக தெரியவந்துள்ளது. இதன் மூலம் உலகில் உள்ள அனைத்து நாடுகளையும்விட இந்தியாவில்தான் HIVயால் பாதிக்கப்பட்டவர்கள் அதிகம்பேர் வாழ்கின்றனர் என்பது தெளிவாகிறது. இன்னொரு புறம், தேசிய எய்ட்ஸ் நோய் கட்டுப்பாட்டு சங்கம் நடத்திய கணக்கெடுப்பின் படி இந்தியாவில் 52லட்சம் பேர் HIVயால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிய வந்துள்ளது. அதன்படி பார்த்தால் HIVயால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கையில் தென்னாப்பிரிக்காவுக்கு அடுத்த இடத்தில் இந்தியா வருகிறது. எப்படிப் பார்த்தாலும் இந்த தீரா நோயினால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை இந்தியாவில் மிகவும் அதிகமாகும்.

2005ம் ஆண்டு ஜூலை இறுதி நிலவரப்படி இந்தியாவில் எய்ட்ஸால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை 1,11,608 ஆகும். இவர்களில் 32,567 பெண்கள் ஆவர். இவர்களில் 37% பேர் 30 வயதுக்கும் குறைவானவர்கள் ஆவர். எய்ட்ஸால் பாதிக்கப்பட்ட பலர் கணக்கில் கொண்டு வரப்படாததால், இந்த புள்ளி விவரங்களை துல்லியமானவையாக கருத முடியாது.

இந்திய மக்கள் தொகையில் 0.9% HIVயால் பாதிக்கப்பட்டுள்ளனர். இதைப் பார்க்கும்பேது மிகவும் குறைந்த அளவாகத் தோன்றலாம். ஆனால் இந்தியாவின் மக்கள் தொகை மிகவும் அதிகம் என்பதால், இந்தியாவில் HIVயால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை மிகவும் அதிகமாகும். இந்திய மக்கள் தொகையில் 0.1% பேருக்கு கூடுதலாக HIVஏற்பட்டால்கூட அது HIVயால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை இப்போதிருப்பதைவிட 5 லட்சத்திற்கும் மேல் உயரும் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தியாவில் HIV தோன்றியதிலிருந்து இந்த குறைபாட்டால் பாதிக்கபட்ட மக்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்தபடியே உள்ளது. ஆனால் 2006ம் ஆண்டின் தொடக்கத்தில் நடத்தப்பட்ட கணக்கெடுப்பின்படி, எய்ட்ஸால் பாதிக்கப்பட்டுள்ள மக்களின் எண்ணிக்கை தென் மாநிலங்களில் குறைந்துள்ளது எனத் தெரிய வந்துள்ளது. அதுமட்டுமின்றி HIVநோய் தாக்கும் வேகம் இந்தியாவில் குறைந்துள்ளதாகவும் தெரியவந்துள்ளது. தொடர்ச்சியான விழிப்புணர்வு பிரச்சாரத்தின் காரணமாக மக்களிடம் "காண்டம்" பயன்பாடு குறித்த விழிப்புணர்வு ஏற்பட்டதாகவும், இதனால் தான் நோய் தாக்கும் விகிதம் குறைந்ததாகவும் ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். அதேநேரத்தில் ஐ.நா. அமைப்பின் சார்பில் வெளியிடப்பட்ட புள்ளி விவரங்களின்படி கீழ்க்கண்ட தகவல்கள் தெரியவந்துள்ளன.

- 2019ம் ஆண்டில் இந்தியாவில் வயது வந்தோரில் 1.9% பேர் HIVயால் பாதிக்கப்பட்டிருப்பார்கள்.

- எய்ட்சால் பாதிக்கப்பட்டு உயிரிழப்போரின் எண்ணிக்கை (1980 முதல் 2000வது ஆண்டு வரை யிலான காலத்தில் 27 லட்சமாக இருந்தது) 2000-2015ம் ஆண்டில் 1.23 கோடியாகவும், 2015-2050ம் ஆண்டில் 4.95 கோடியாகவும் உயரும்.
- 2019ம் ஆண்டில் எய்ட்ஸின் விளைவாக இந்தியாவின் ஆண்டு பொருளாதார வளர்ச்சி விகிதம் ஒரு சதவீதம் குறையும்.

HIV மற்றும் எய்ட்ஸ் தொடர்பான புள்ளி விவரங்களின் துல்லியமான எண்ணிக்கை எப்படியிருந்தாலும் அது இந்தியாவிலும் இந்தியாவின் எதிர்காலத்தின்மீதும் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும். இதை எந்த அளவுக்கு குறைக்க முடியுமோ அந்த அளவுக்கு குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இது பற்றிய விளக்கிய UNAIDS அமைப்பின் இயக்குனர் பீட்டர் பையோட், "HIV என்ற கொடிய நோயில் இருந்து மீண்டுவர இந்தியா எதிர் கொள்ள வேண்டிய சவால்கள் மிகவும் அதிகமாகும். HIV தடுப்பு மற்றும் மருத்துவத்தை அனைவருக்கும் வழங்குவதற்கு தேவையான வளங்கள் இந்தியாவிடம் தாராளமாக உள்ளன. எய்ட்சை வீழ்த்த வேண்டும் என்றால், உலகின் மற்ற நாடுகளைப் போலவே இந்தியாவிலும் நமது பணிகளை தீவிரப் படுத்த வேண்டும்" என்று கூறினார்.

சுற்றுச்சூழல் பாதுகாப்பு

நாம் எதிர்கொள்ளவிருக்கும் மிகப் பெரிய சுற்றுச்சூழல் ஆபத்துகளில் முக்கியமானது தண்ணீருக்கு ஏற்படும் பற்றாக்குறையாகும். இப்போதே இந்தியாவின் பல பகுதிகளிலும் இன மோதல்களும், அரசியல் பதற்றமும் ஏற்படுவதற்கு தண்ணீர் பற்றாக்குறை தான் காரணமாக உள்ளது. சுமார் 130 கோடி மக்கள் தூய்மையான குடிநீர் வசதி இல்லாமல் அவதிப்படுகின்றனர். மிக மோசமான துப்புரவு சூழலால்தான் தண்ணீர் கெடுகிறது. (இந்தியாவில் சுமார் 20 லட்சம் பேருக்கு தூய்மையான துப்புரவு வசதிகள் இல்லை.)

இந்தியாவில் நிலத்தடி நீர் நிலைமை குறித்து மத்திய நிலத்தடி நீர்வள வாரியம் நடத்திய ஆய்வில், கடந்த 20 ஆண்டுகளில் (1985-2004) இந்தியாவின் 16மாநிலங்களில் உள்ள 274 மாவட்டங்களின் நிலத்தடி நீர் மட்டம் 4 மீட்டருக்கும்மேல் குறைந்திருக்கிறது. நிலத்தடி நீர் மட்டம் குறைந்ததற்கான முக்கிய காரணம் நகரமயமாதலும் வேளாண்மை தொழில்துறை மற்றும் வீட்டுப்பயன்பாட்டிற்கான குடிநீரின் தேவை அதிகரித்திருப்பதும்தான். இது தவிர நிலத்தடி நீர் அளவுக்கு அதிகமாக உறிஞ்சப்படுவதும், மழை அளவு குறைந்ததும்கூட நிலத்தடி நீர் மட்டம் குறைந்ததற்கு முக்கிய காரணம் ஆகும். தண்ணீரைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியம் குறித்து மக்களிடையே போதிய விழிப்புணர்வு இல்லாததும்கூட இதற்கான காரணம் ஆகும்.

நிலத்தடி நீர் மட்டம் குறைந்து வருவது மிகவும் கவலையளிக்கும் விசயமாகும். இந்தியாவின் தனிநபர் தண்ணீர் இருப்பு, உலக அளவில் உள்ள நிலைமையுடன் ஒப்பிடும்போது மிகவும் குறைவாகும். அதே நேரத்தில் பருவமழை மூலம் கிடைக்கும் தண்ணீர் வீணாக கடலில் சேரும் தண்ணீரின் அளவும் மிகமிக அதிகமாகும். இந்தியாவில் பயன்பாட்டிற்காக உள்ள நிலங்களின் அளவை விட, தண்ணீரின் அளவு மிகவும் அதிகமாகும் (ஒட்டு மொத்த தண்ணீர் பயன் பாட்டில் 90% பாசனத்திற்காகத்தான் பயன்படுத்தப் படுகிறது). இந்தியாவில் உள்ள தண்ணீர் வளத்தைக் கொண்டு 20 கோடி எக்டேர் நிலத்தை பாசனம் செய்ய முடியும். அனைத்து இயற்கை வளங்களில் இருந்தும் இந்தியாவுக்கு ஆண்டுக்கு 4,000 பில்லியன் கன மீட்டர் (4 லட்சம் கோடி கனமீட்டர்) தண்ணீர் கிடைக்கிறது.

- ஆவியாதல் - 700 மில்லியன் கனமீட்டர்.
- தரையில் ஓடி வீணாகுதல் - 700 மில்லியன் கனமீட்டர்.
- கடலில் ஓடி கலத்தல் - 1,500 மில்லியன் கன மீட்டர்.

  மொத்தம் 2,900 மில்லியன் கனமீட்டர்.
- நிலத்தடி நீர் மூலம் புதுப் பித்தல் மூலம் கிடைப்பது 430 மில்லியன் கனமீட்டர்.
- தரைமீது சேரும் தண்ணீர் - 370 மில்லியன் கனமீட்டர்.
- பயன்படுத்தப்படாத தண்ணீர் (சேகரிக்கப்பட வேண்டும்) 300 மில்லியன் கன மீட்டர்.

நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்த வேண்டுமென்றால் அதற்காக தடுப் பணைகள் கட்டப்பட வேண்டும். நீர்ப் பாசன வசதிகள் ஏற்படுத்தப்பட வேண்டும். ஆறுகளும், குளங்களும் தூர்வாரப்பட வேண்டும். இவை தவிர குளங்கள் உள்ளிட்ட நீர் நிலைகளுக்கு தண்ணீர் வரும் வழிகளும், தண்ணீர் வெளியேறும் வழிகளும் சுத்தப்படுத்தப்பட வேண்டும், கிணறுகளில் தண்ணீர் புதுப்பிக்கப்பட வேண்டும்.

சுற்றுச்சூழல் முறைக்கு பெரும் அச்சுறுத்தலாக விளங்கும் வேறு இரண்டு விஷயங்கள் நிலம் மற்றும் காற்று மாசு ஆகும். இவற்றால்தான் பாதுகாப்பற்ற உணர்வு ஏற்படுகிறது; உள்ளூர் ஏழை மக்களின் வாழ்வா தாரம் பாதிக்கப்படுகிறது. காடுகளை அழிப்பதால் கடுமையான பஞ்சமும் வெள்ளமும் ஏற்படுகின்றன. வறுமை மற்றும் நில

Written by Administrator
Tuesday, 02 November 2010 00:00 - Last Updated Wednesday, 03 November 2010 07:55



மின்மை காரணமாக ஏழை மக்கள் மிக மிக குறுகிய பகுதிகளுக்கு செல்கின்றனர். இதனால் அவர்கள் மேலும் பல இயற்கை தீங்குகளை அனுபவிக்க வேண்டியிருக்கிறது.

தனிநபர் பாதுகாப்பு

உடல் ரீதியான வன்முறையில் இருந்து பாதுகாத்துக் கொள்வதை விட மனிதப் பாதுகாப்பின் வேறு எந்த அம்சங்களும் மக்களுக்கு முக்கியம் அல்ல. தனிநபர் பாதுகாப்புக்கு ஏற்படும் அச்சுறுத்தல்கள்...

- அரசிடமிருந்து ஏற்படும் ஆபத்து (உடல் ரீதியான கொடுமை)
- பிற நாடுகளால் ஏற்படும் ஆபத்து (போர்)
- பிற குழுவினரால் ஏற்படும் ஆபத்து (இன மோதல்)
- தனிநபர்கள் அல்லது குழுக்களுக்கு எதிராகச் செயல்படும் தனி நபர்கள் அல்லது குழுக்கள் (குற்றங்கள், தெருக்கலவரங்கள்)
- பெண்களுக்கு எதிரான குற்றங்கள் (கற்பழிப்பு, குடும்பச் சண்டை)
- குழந்தைகளின் பலவீனம் மற்றும் பிறரை சார்ந்திருக்கும் தன்மையை பயன்படுத்தி அவர்கள் மீது ஏவப்படும் கொடுமைகள் (குழந்தைகள் சீரழிப்பு)
- தமக்குத் தாமே ஏற்படும் அச்சம் (தற்கொலை, போதை மருந்து பயன்பாடு)

வளரும் நாடுகளில் குற்றங்களும் வன்முறைகளும் வாழ்க்கையின் உண்மைகளாக மாறிவிட்டன. பெண்களுக்கு தொட்டில் முதல் சுடுகாடு வரை தனி நபர் பாதுகாப்பின்மை தொடர்கிறது. வீடுகளில் பெண்கள் தான் கடைசியில் சாப்பிட வேண்டும்; பள்ளிகளிலும் அவர்கள்தான் கடைசியாக கற்க வேண்டும்; பணியிலும் அவர்களுக்கு கடைசி மரியாதைதான். ஆனால் பணி நீக்கம் செய்யப்படுவதில் மட்டும் முதல் மரியாதை. இவை அனைத்திற்கும் காரணம் அவர்களின் பலவீனம்தான். இந்த சூழ்நிலை மாற்றப்பட வேண்டும். பெண்கள் ஆண்களுக்கு இணையாக நடத்தப்பட வேண்டும்.

சமுதாயப் பாதுகாப்பு

பாரம்பரிய இனங்கள் ஒன்றின் மீது ஒன்று தாக்குதல் நடத்திக் கொள்கின்றன. உலகிலுள்ள நாடுகளில் 40 சதவீதத்திற்கும் மேற்பட்ட நாடுகளில் 5க்கும் மேற்பட்ட இனங்கள் உள்ளன. அவற்றில் ஓர் இனமோ அல்லது ஒன்றுக்கும் மேற்பட்ட இனங்களோ பராபட்சத்தை எதிர்கொள்கின்றன. இன மோதல்களால் மிகக் கொடூரமான விளைவுகள் ஏற்படுகின்றன. ஆப்கானிஸ்தான், ஈராக்,சோமாலியா, எத்தியோப்பியா, லைபீரியா, அங்கோலா, சூடான், இலங்கை ஆகியவைதான் அதிக அளவில் இன மோதல்கள் நடைபெறும் நாடுகளாகும். அதிர்ஷ்டவசமாக இந்தியா அத்தகைய சூழ்நிலையை எதிர்கொண்டதில்லை.

அரசியல் பாதுகாப்பு

மனிதப் பாதுகாப்பின் முக்கியமான அம்சங்களில் ஒன்று என்னவெனில் மக்களின் அடிப்படை மனித உரிமைகளை மதிக்கும் சமுதாயத்தில் வாழ்வதுதான்.

1990களின் தொடக்கத்தில் மக்கள் தொகையில் இளைஞர்களின் பங்கு 18.5 சதவிகிதம் முதல் 19 சதவிகிதம் வரை இருந்தது. 1991ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின் போது இந்தியாவில் இளைஞர்களின் எண்ணிக்கை 15.9 கோடியாக உயர்ந்தது. இவர்களில் 53 சதவிகிதம் பேர் அதாவது 8.5 கோடி பேர் உழைக்கும் தொழிலாளர்களாக இருந்தனர். 2001ம் ஆண்டில் இந்திய இளைஞர்களின் எண்ணிக்கை 21.2 கோடியாக உயர்ந்திருக்கும் என்று அப்போது கூறப்பட்டது. 1993-94ம் ஆண்டில் 5.6 சதவிகீதமாக இருந்த கிராமப்புற ஆண்களின் தினசரி வேலை வாய்ப்பு விகிதம் 2004ம் ஆண்டில் 9 சதவிகிதமாக உயர்ந்துவிட்டது. கிராமப்புற பெண்களின் தினசரி வேலை வாய்ப்பு விகிதம் 5.6 சதவிகிதத்திலிருந்து 9.3 சதவிகிதமாக உயர்ந்துவிட்டது. நகர்ப்புற ஆண்களின் தினசரி வேலை வாய்ப்பு விகிதம் 6.7 சதவிகிதத்திலிருந்து 8.1 சதவிகிதமாகவும், பெண்களுக்கான விகிதம் 10.5 சதவிகிதத்திலிருந்து 11.7 சதவிகிதமாகவும் உயர்ந்து விட்டது. சுமார் 100 கோடி மக்கள் தொகை கொண்ட இந்தியாவில் இந்த எண்ணிக்கை அபாய அளவாக தெரிய வில்லை என்ற போதிலும் இதனால் மக்களிடையே ஏற்படும் விரக்தி இந்திய சமூக, அரசியல் அமைப்பின் நிலைத் தன்மைக்கு மிகப் பெரிய அச்சுறுத்தலை ஏற்படுத்தும்.

	ஊரக - நகர்ப்புற இளைஞர்கள் (1994- கோடிகளில்)					
	ஆண்கள்			பெண்கள்		
	15-19வயது	20-24வயது	மொத்தம்	15-19வயது	20-24வயது	மொத்தம்
ஊரகம்	3.597	3.122	6.719	3.084	3.036	6.120
நகரம்	1.296	1.208	2.504	1.143	1.992	2.235
மொத்தம்	4.893	4.330	9.223	4.227	4.128	8.355

ஆதாரம் : தேசிய மாதிரிக் கணக்கெடுப்பு

1993-94லிருந்து 1999-2000 வரையிலான காலத்தில் ஊரக வேலை வாய்ப்பு விகிதம் 0.67 சதவீதமும் வேளாண்மை வேலைவாய்ப்பு 0.02 சதவீதமும் உயர்ந்துள்ளது. 55வது தேசிய மாதிரிக் கணக்கெடுப்பின்படி, 1999-2000வது ஆண்டில் இந்திய மக்களில் சுயதொழில் செய்வோரின் எண்ணிக்கை 53% ஆகும். அவர்களில் 58% பேர் (13.3 கோடி முதல் 13.4 கோடிபேர்) வேளாண்மை மற்றும் அதைச் சார்ந்த துறைகளில் தொழில் செய்து வருகின்றனர். ஊரக மற்றும் நகர்ப்புற இந்தியாவில் நிலவும் உணவு பாதுகாப்பின்மைக்கான காரணம் குறித்து நடத்தப்பட்ட விரிவான ஆய்வில், போதிய வேலைவாய்ப்பு மற்றும் வாழ்வாதாரம் இல்லாததால் மக்களின் வாங்கும் சக்தி குறைந்து விட்டதுதான் மக்களின் பசி மற்றும் பட்டினிக்கு காரணம் ஆகும். அமைப்பு சார்ந்த துறைகளில் வேலைவாய்ப்பு வேகமாக குறைந்து வருவதால், கிராமப் புறங்களில் அதிக வருவாய் கிடைக்கும் வகையில் சுயதொழில் வாய்ப்புகளை பெருக்குவதற்கு ஏற்ற கொள்கைச் சூழலை உருவாக்க வேண்டும். வேலையில்லாத பொருளாதார வளர்ச்சியையும், வேலை பார்க்கும் பொருளாதார வளர்ச்சியையும் தவிர்க்க இது மிகவும் அவசியமாகும்.

பொருளாதார சீர்திருத்த காலத்தில் இந்தியாவின் வேலை வாய்ப்புச் சூழல் குறித்த ஆய்விலிருந்து பல உண்மைகள் தெரியவந்துள்ளன. தாராளமயமாக்கல், தனியார்மயமாக்கல், உலகமயமாக்கல் ஆகிய கொள்கைகள் பாரபட்சமானவை என்பதால், அவைதான் கிராமப்புற வேலை வாய்ப்பிற்கும், வேளாண் வேலை வாய்ப்பிற்கும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது என்பது தெரியவந்துள்ளது. இந்த நிலை மாற்றப்பட வேண்டும். இந்தியாவின் வேளாண் துறைக்கும் அதை நம்பியுள்ள பெருமளவிலான மக்களுக்கும் போதிய ஆதாரம் அளிக்கும் வகையில் பொருளாதார கொள்கைகள் மாற்றப்பட வேண்டும். குறிப்பாக, நமது கிராமப்புற உழவர்கள் உற்பத்தி செய்யும் பொருட்களுக்கு நல்ல விலை வழங்குதல், அவர்களுக்கு கடன் வசதி செய்து தருதல், கிராமப்புற வேலை வாய்ப்பு மற்றும் கட்டமைப்பு வசதிகளை பெருக்குதல் ஆகியவற்றுக்கு வகை செய்யும் விதத்தில் கொள்கைகள் அமைய வேண்டும்.

கல்வி மற்றும் சுகாதாரத் துறைக்கு, குறிப்பாக கிராமப் பகுதிகளில் அதிக அளவில் முதலீடு செய்யப்பட வேண்டும். இதைச் செய்வதன் மூலமும், தேவைகளை பெருக்கும் நோக்குடன் பெருநிலை பொருளாதாரக் கொள்கைகளை திருத்தி அமைப்பதன் மூலமும் கிராமப்புற வேலை வாய்ப்பு வளர்ச்சிக்கு வகை செய்ய முடியும்.

பயிரிடுதல், கால் நடை வளர்ப்பு, மீன் வளர்ப்பு, காடு வளர்ப்பு, வேளாண் காடு வளர்ப்பு, வேளாண் விளை பொருட்களை பதனிடுதல் ஆகியவற்றை உள்ளடக்கிய வேளாண் தொழில்தான் இந்தியாவின் மிகப் பெரிய தனியார் தொழில்துறையாகும். இத்தொழில்தான் சுமார் 60 கோடி ஆண்கள் மற்றும் பெண்களுக்கு வாழ்வாதாரம் வழங்குகிறது. பண்ணை மற்றும் பண்ணை சாராத வேளாண் துறைகளில் பயனுள்ள வாழ்வாதார வாய்ப்புகளை உருவாக்குவதற்கான நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. எங்கெல்லாம் அதிக அளவிலான மக்கள் வேளாண் தொழிலை மட்டும் வாழ்வாதாரமாக கொண்டிருக்கிறார்களோ, அங்கெல்லாம் நுண்ணூட்டச் சத்து குறைவாக காணப்படுகிறது என்று அனைவருக்கும் உணவு அமைப்பு தெரிவித்திருக்கிறது. கிராமப்புறங்களில் அதிக ஊதியத்துடன் கூடிய பண்ணை சாராத வேளாண் தொழில் வாய்ப்புகள் அதிகரிக்காததால்தான் அங்கு அதிக அளவில் பசியும் பட்டினியும் காணப்படுகிறது.

இந்தியாவின் முன் இப்போதுள்ள மிகப்பெரிய சவால், அனைத்து இளைஞர்களுக்கும் உற்பத்தி பணிக்கான பயிற்சி, சந்தைப்படுத்தும் திறன், புதிய விஷயங்களைக் கற்றுக் கொள்வதற்கான தயார்நிலை, புதுமைகளை கண்டு பிடிக்கும் தன்மை ஆகியவற்றை முறையான பணி நெறியை வழங்குவதன் மூலம் ஏற்படுத்துவதுதான். வேகமாக மாறிவரும் பொருளாதாரச் சூழலில் உலகம் என்ற கிராமத்தில் மிகப் பெரிய நாடுகூட மிகச்சிறிய பகுதிதான் என்பதால் வளர்ச்சிக்கும், உலகில் தாக்குபிடிக்கவும் மேற்கண்ட இலக்குகளை எட்டுவது மிகவும் அவசியமாகும். இந்த இலக்குகளை திரும்பத் திரும்ப வலியுறுத்துவது வெறும் வாய்ச்சவடாலாக இருந்துவிடக் கூடாது. இந்தியாவில் கல்வி அறிவின்மையை போக்கி அனைவருக்கும் உயர்தரக் கல்வி வழங்கப்படுவதை உறுதி செய்ய வேண்டுமென்றால் அதற்குத் தேவையான முதலீட்டை அரசுகள் வழங்க வேண்டும். ■